ஶ்ரீ:

ஶ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஶ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

# திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# ॥ சலம் கொண்ட ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஶ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

# ‖ சலம் கொண்ட ‖

## திருநாங்கூர் வைகுந்தவிண்ணகரம்

‡சலம் கொண்ட இரணியனதகல் மார்வம் கீண்டு⋆
    தடங்கடலைக் கடைந்தமுதம் கொண்டுகந்த காளை⋆
நலம் கொண்ட கரு முகில் போல் திருமேனி அம்மான்⋆
    நாள்தோறும் மகிழ்ந்தினிது மருவி உறை கோயில்⋆
சலம் கொண்டு மலர் சொரியும் மல்லிகை ஒண் செருந்தி⋆
    சண்பகங்கள் மண நாறும் வண் பொழிலினூடே⋆
வலங்கொண்டு கயல் ஓடி விளையாடு நாங்கூர்⋆
    வைகுந்த விண்ணகரம் வணங்கு மட நெஞ்சே (1)

திண்ணியதோர் அரி உருவாய் திசை அனைத்தும் நடுங்க⋆
    தேவரொடு தானவர்கள் திசைப்ப⋆ இரணியனை
நண்ணி அவன் மார்வகலத்துகிர் மடுத்த நாதன்⋆
    நாள்தோறும் மகிழ்ந்தினிது மருவி உறை கோயில்⋆
எண்ணில் மிகு பெருஞ்செல்வத்தெழில் விளங்கு மறையும்⋆
    ஏழ் இசையும் கேள்விகளும் இயன்ற பெருங்குணத்தோர்⋆
மண்ணில் மிகு மறையவர்கள் மலிவெய்து நாங்கூர்⋆
    வைகுந்த விண்ணகரம் வணங்கு மட நெஞ்சே (2)

அண்டமும் இவ்வலை கடலும் அவனிகளும் எல்லாம்⋆
    அமுதுசெய்த திரு வயிற்றன் அரன் கொண்டு திரியும்⋆
முண்டம் அதுநிறைத்தவன் கண் சாபம் அது நீக்கும்⋆
    முதல்வன் அவன் மகிழ்ந்தினிது மருவி உறை கோயில்⋆
எண் திசையும் பெருஞ்செந்நெல் இளந்தெங்கு கதலி⋆
    இலைக்கொடியொண் குலைக் கமுகோடிசலி வளம் சொரிய⋆
வண்டு பல இசை பாட மயில் ஆலு நாங்கூர்⋆
    வைகுந்த விண்ணகரம் வணங்கு மட நெஞ்சே (3)

www.prapatti.com

கலை இலங்கும் அகல் அல்குல் அரக்கர் குலக் கொடியைக்⋆
காதொடு மூக்குடன் அரியக் கதறி அவள் ஓடி⋆
தலையில் அங்கை வைத்து மலை இலங்கை புகச் செய்த⋆
தடந் தோளன் மகிழ்ந்தினிது மருவி உறை கோயில்⋆
சிலை இலங்கு மணி மாடத்துச்சிமிசைச் சூலம்⋆
செழுங்கொண்டல் அகடிரியச் சொரிந்த செழு முத்தம்⋆
மலை இலங்கு மாளிகைமேல் மலிவெய்து நாங்கூர்⋆
வைகுந்த விண்ணகரம் வணங்கு மட நெஞ்சே (4)

மின்னனைய நுண்மருங்குல் மெல்லியற்கா⋆ இலங்கை
வேந்தன் முடி ஒருபதும் தோள் இருபதும் போய் உதிர⋆
தன் நிகர் இல்சிலை வளைத்தன்றிலங்கை பொடி செய்த⋆
தடந் தோளன் மகிழ்ந்தினிது மருவி உறை கோயில்⋆
செந்நெலொடு செங்கமலம் சேல் கயல்கள் வாளை⋆
செங்கழு நீரொடு மிடைந்து கழனி திகழ்ந்தெங்கும்⋆
மன்னுபுகழ் வேதியர்கள் மலிவெய்து நாங்கூர்⋆
வைகுந்த விண்ணகரம் வணங்கு மட நெஞ்சே (5)

பெண்மை மிகு வடிவு கொடு வந்தவளைப்⋆ பெரிய
பேயினதுருவு கொடு மாள உயிர் உண்டு⋆
திண்மை மிகு மருதொடு நற் சகடம் இறுத்தருளும்⋆
தேவன் அவன் மகிழ்ந்தினிது மருவி உறை கோயில்⋆
உண்மை மிகு மறையொடு நற் கலைகள் நிறை பொறைகள்⋆
உதவு கொடை என்றிவற்றின் ஒழிவில்லா⋆ பெரிய
வண்மை மிகு மறையவர்கள் மலிவெய்து நாங்கூர்⋆
வைகுந்த விண்ணகரம் வணங்கு மட நெஞ்சே (6)

விளங்கனியையிளங்கன்று கொண்டுதிரவெறிந்து⋆
வேல் நெடுங்கண் ஆய்ச்சியர்கள் வைத்த தயிர் வெண்ணெய்⋆
உளம் குளிர அமுது செய்திவ்வுலகுண்ட காளை⋆
உகந்தினிது நாள்தோறும் மருவி உறை கோயில்⋆
இளம் படிநல் கமுகு குலைத் தெங்கு கொடிச் செந்நெல்⋆
ஈன் கரும்பு கண்வளரக் கால் தடவும் புனலால்⋆



www.prapatti.com

வளம் கொண்ட பெருஞ்செல்வம் வளரும் அணி நாங்கூர்⋆
வைகுந்த விண்ணகரம் வணங்கு மட நெஞ்சே (7)

ஆறாத சினத்தின் மிகுநரகன் உரம் அழித்த⋆
அடல் ஆழித் தடக்கையன் அலர் மகட்கும் அரற்கும்⋆
கூறாகக் கொடுத்தருளும் திருவுடம்பன் இமையோர்⋆
குல முதல்வன் மகிழ்ந்தினிது மருவி உறை கோயில்⋆
மாறாத மலர்க் கமலம் செங்கழுநீர் ததும்பி⋆
மதுவெள்ளம் ஒழுக வயல் உழவர் மடை அடைப்ப⋆
மாறாத பெருஞ்செல்வம் வளரும் அணி நாங்கூர்⋆
வைகுந்த விண்ணகரம் வணங்கு மட நெஞ்சே (8)

வங்க மலி தடங்கடலுள் வானவர்களோடு⋆
மா முனிவர் பலர் கூடி மா மலர்கள் தூவி⋆
எங்கள் தனி நாயகனே! எமக்கருளாய் என்னும்⋆
ஈசன் அவன் மகிழ்ந்தினிது மருவி உறை கோயில்⋆
செங்கயலும் வாளைகளும் சென்னெலிடைக் குதிப்பச்⋆
சேல் உகளும் செழும் பணை சூழ் வீதிதொறும் மிடைந்து⋆
மங்குல் மதி அகடுரிஞ்சு மணி மாட நாங்கூர்⋆
வைகுந்த விண்ணகரம் வணங்கு மட நெஞ்சே (9)

‡சங்கு மலி தண்டு முதல் சக்கரம் முன் ஏந்தும்⋆
தாமரைக் கண் நெடிய பிரான் தான் அமரும் கோயில்⋆
வங்கமலி கடல் உலகில் மலிவெய்து நாங்கூர்⋆
வைகுந்த விண்ணகர்மேல் வண்டறையும் பொழில் சூழ்⋆
மங்கையர் தம் தலைவன் மருவலர் தம் உடல் துணிய⋆
வாள் வீசும் பரகாலன் கலிகன்றி சொன்ன⋆
சங்கமலி தமிழ் மாலை பத்திவை வல்லார்கள்⋆
தரணியொடு விசும்பாளும் தன்மை பெறுவாரே (10)

‖ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ‖



www.prapatti.com